Tamil

# குழந்தைகள் பறப்பதில்லை! ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து குழந்தைகள் தவறி விழுவதற்கு நாமே காரணம்!

## ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து குழந்தைகள் விழுவதைத் தவிருங்கள்!

**ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து தவறி விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. பெரும்பாலும் குழந்தைகள் தமது சொந்த வீடுகளில் இருந்தே தவறி விழுகின்றனர். இப்படி விழுவதன் காரணமாக குழந்தைகளுக்கு பலத்த காயம் அல்லது மரணம் ஏற்படலாம்.**

ஒரு வயதிலிருந்து ஐந்து வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு என்ன ஏது என்று பார்க்கும் ஆவல் இயற்கையாகவே அதிகம். ஆனால் ஆபத்தை அறியும் திறன் இவர்களுக்கு இல்லை என்பதால் இக் குழந்தைகளுக்கு விபத்து ஏற்படும் அபாயம் அதிகம். காற்றுக்காக ஜன்னல்களையும், மாடி முகப்புக் கதவுகளையும் பகலிலும் இரவிலும் திறந்து வைக்கும் வெயில் அதிகம் உள்ள கோடை மாதங்களில்தான் குழந்தைகள் தவறி விழுவது அதிகம்.

ஜன்னல்கள் மற்றும் கைப்பிடிச் சுவர் தூண்களுக்கு இடையே அதிகபட்சமாக 12.5 சென்டி மீட்டர் இடைவெளிதான் இருக்க வேண்டும் என்பது தற்போதைய அவுஸ்திரேலிய கட்டிடக் கோட்பாட்டு விதிமுறையாகும். பழைய கட்டிடங்களில் உள்ள ஜன்னல்கள் மற்றும் கைப்பிடிச் சுவர்த் தூண்கள் தற்போதைய கட்டிடக் கோட்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான சட்டம் எதுவும் இல்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இருந்தாலும், பாதுகாப்பை அதிகரிக்கும் பொருட்டு நீங்கள் செய்யவல்ல காரியங்கள் உள்ளன.

நீங்கள் வாடகை வீட்டில் வசித்து வந்தால், புதிதாக ஏதாவது சாதனத்தைப் பொருத்துவதற்கும் முன்பாவோ அல்லது வீட்டில் மாற்றங்கள் எதையும் ஏற்படுத்துவதற்கும் முன்பாகவோ வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமான ஒப்புதலை நீங்கள் பெற வேண்டும். ஜன்னல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சாதனங்களைப் பொருத்துவதற்கு வாடகைதாரருக்கு வீட்டு உரிமையாளர் காரணமற்ற முறையில் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை சட்டம் அனுமதிக்காது.





மேலதிகத் தகவல்கள் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களுக்கு **www.health.nsw.gov.au/childsafety** எனும் வலைத்தளம் செல்க.

NSW

the children's hospital at Westmead

# குழந்தைகள் பறப்பதில்லை! ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து குழந்தைகள் தவறி விழுவதற்கு நாமே காரணம்!

**ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து குழந்தைகள் விழுவதைத் தவிருங்கள்!**

## ஜன்னல் பாதுகாப்பு

ஈக்களைத் தடுப்பதற்கான வலைகள் பொருத்தப்பட்டிருந்தாலும், 12.5 சென்டி மீட்டருக்கும் மேலாகத் திறக்கக்கூடிய ஜன்னல்கள் வழியாக குழந்தைகள் விழக்கூடும்.

### உங்கள் வீட்டு ஜன்னல்களிலிருந்து குழந்தைகள் தவறி விழுவதைத் தடுக்க கீழ் வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்:

- கூடிய வரைக்கும், எல்லா ஜன்னல்களும், குறிப்பாக படுக்கையறை ஜன்னல்கள் கீழ் வரும் வகைகளில் அமைந்திருக்க வேண்டும்:
  - தரை மட்டத்திற்கும் மேலாக உள்ள மாடிகளில் உள்ள ஜன்னல்கள் 12.5 சென்டி மீட்டர் இடைவெளிக்கும் மேல் திறக்கக் கூடாது.
  - 12.5 சென்டி மீட்டர் இடைவெளிக்கும் மேலாக ஜன்னல் திறப்பதைத் தடுக்கும் வகையில் தாழ்கள் அல்லது பூட்டுகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும், அல்லது இடைவெளிகளுக்குப் பாதுகாப்பாக தடுப்புகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் ('குழந்தைகள் பறப்பதில்லை' ஜன்னல் பாதுகாப்பு சாதன வழிகாட்டி-யைப் பார்க்க).
  - மேற் பக்கத்திலிருந்து திறக்கும் வகையில் ஜன்னல் இருக்க வேண்டும்.
- குழந்தைகள் ஜன்னலுக்கு ஏறிச் செல்வதைத் தடுக்கும் வகையில், படுக்கைகள் மற்றும் மேசை-நாற்காலி போன்ற இதர தட்டுமுட்டு சாமான்கள் ஜன்னலில் இருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஜன்னல் வழியாக குழந்தை வெளியே விழுவதை ஈக்களைத் தடுப்பதற்காகப் போடப்பட்டுள்ள வலை தடுத்துவிடும் என எண்ணி நீங்கள் அதை நம்பி இருந்துவிட வேண்டாம்.
- ஜன்னலிலிருந்து தள்ளி விளையாட வேண்டும் என்று குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும்.
- குழந்தைகளை எப்போதும் உங்கள் மேற்பார்வையில் வைத்திருக்க வேண்டும்.

## பாதுகாப்பான மாடி முகப்பு

### உங்களது மாடி முகப்பிலிருந்து குழந்தைகள் தவறி விழுவதைத் தடுக்க கீழ் வரும் விடயங்களை உறுதி செய்யுங்கள்:

- இயலும் தருணங்களில், கைப்பிடிச் சுவர்க் கம்பிகள்:
  - குறைந்தபட்சம் 1 மீட்டர் உயரம் இருக்க வேண்டும்.
  - 12.5 சென்டி மீட்டருக்கு மேல் இடைவெளி இல்லாத, மேலிருந்து கீழாக உள்ள தடுப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் (தடுப்புக் கம்பிகளுக்கு இடையே உள்ள இடைவெளியை அளவுகோல் கொண்டு அளந்து பார்க்கவும்).
  - குழந்தைகள் ஏறுவதைத் தடுக்கும் வகையில் குறுக்காக அல்லது ஏறத்தாழ குறுக்காகப் போடப்பட்டுள்ள கம்பிகள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- மாடி முகப்பின் ஓரத்தில் இருந்து தட்டுமுட்டு சாமான்கள், பூந்தொட்டிகள் போன்ற குழந்தைகள் ஏறக்கூடிய பொருட்கள் தூரமாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மாடி முகப்பின் ஓரத்திற்கு குழந்தைகள் இழுத்துச் செல்லும் அளவிற்கு இலேசான பொருட்கள் இருந்தால் அதை நீங்கள் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.
- குழந்தை மாடி முகப்பிற்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் மாடி முகப்பிற்கு வழி விடும் கதவுகள் பூட்டப்பட்டிருக்க வேண்டும்.
- எல்லா வேளைககளிலும் குழந்தைகள் மற்றவர்கள் கண்காணிப்பில் இருக்க வேண்டும்.





மேலதிகத் தகவல்கள் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களுக்கு
**www.health.nsw.gov.au/childsafety**
எனும் வலைத்தளம் செல்க.

NSW

the children's hospital at Westmead

November 2012 © NSW Health SHPN Tamil (CPH) 120390